REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 18௳ வியாழன் (31—1—57) ★ ★ வெளியூர்: தை 19௳ வெள்ளி (1—2—57) [இதழ் 201

பிறக்கப்போகும் குழந்தை ஆணா? பெண்ணா?

வளரும் விஞ்ஞானம் பதில் கூறும்

பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிந்து கூற, புதிதாகப் பரிசோதிக்கப்பட்ட முறை ஒன்று நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

மின்னசோட்டா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர்கள் இந்த முறையைக் கண்டுள்ளனர்.

44 சந்தர்ப்பங்களில் இம்முறையை அவர்கள் பரீட்சித்தனர் என்றும், ஒவ்வொருமுறையும் வெற்றி பெற்றனர் என்றும் செய்தி கூறுகிறது.

பொதுத் தேர்தல்: முதல் கட்டம் முடிந்தது

மக்கள் சிந்திக்கத் துவங்கிவிட்டனர்

தி. மு. கழக அபேட்சகர்கள் அனைவரும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்தனர்

எல்லா இடங்களிலும் பலமுனை போட்டியே இருக்கும்

சென்னை, சன. 31—

பொதுத் தேர்தல்களின் முதல் கட்டம் அபேட்சகர்களின் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் வேலை—நேற்று முன் தினத்துடன் முடிந்துவிட்டது. வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கும் தேர்தலைப் பற்றிய சிந்தனைகள் மக்கள் உள்ளத்தில் முளைவிடத் துவங்கிவிட்டன.

சென்னை சட்டசபைக்கான 205 இடங்களுக்கு 1,281 அபேட்சகர்கள் தங்களது நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

மக்கள் சபைக்கு, தமிழ் நாட்டிலிருந்து 41 பிரதிநிதிகளுக்கு இடமுண்டு; இந்த 41 இடங்களுக்கு 206 பேர்கள் போட்டியிடப்போவதாக நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்திருக்கின்றனர்.

சட்டசபைத் தொகுதிகளில் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதிக்குத்தான் அதிகமான நியமனப் பத்திரங்கள் தாக்கலாகி உள்ளன. இந்தத் தொகுதியில் 24 அபேட்சகர்கள் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் தொகுதியில் மட்டும்தான் இரண்டே இரண்டு அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்கள் தாக்கலாகியுள்ளன.

எனவே, ஏறத்தாழ 203 இடங்களில் பலமுனைப் போட்டிதான் ஏற்படும்; காங்கிரசுடன் எவருக்கும் நேர்முகப் போட்டியிடும் வாய்ப்பு இருக்காது என்பது தெளிவாகியுள்ளது.

நியமனப் பத்திரங்கள் பிப்ரவரி 1-ந் தேதியன்று, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பின்னர், எல்லா அபேட்சகர்களின் பெயரும் வெளியிடப்படும். நியமனத்தை வாபஸ் பெறுவதற்குக் கடைசி தேதி பிப்ரவரி 4—என்று தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் அனைவரும் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். அந்த விபரங்கள் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன.

பிப்ரவரி 4-ந்தேதிக்குப் பிறகு தேர்தலில் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்களின் முழு விவரங்களும் வெளியிடப்படும்.

ஏற்கனவே நியமித்த கழக அபேட்சகர்களுக்கு தலைமைக் கழகம், இரண்டொரு தொகுதிகளில் மாற்றங்கள செய்துள்ள விவரமும் அடுத்து வெளியிடப்படும்.

சென்னை சட்டசபைக்கு

சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய 205 இடங்களுக்கு, கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தொகுதி தவிர மற்ற 204 இடங்களுக்கும் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருக்கும் அபேட்சகர்களின் எண்ணிக்கை மாவட்டவாரியாகக் கீழே தரப்பட்டிருக்கிறது:—

சென்னை நகரம் 10 இடங்கள்—47 பேர்.

செங்கற்பட்டு 13 இடங்கள்—67 பேர்.

வட ஆற்காடு 20 இடங்கள்—115 பேர்.

தென் ஆற்காடு 20 இடங்கள்—106 பேர்.

தஞ்சாவூர் 20 இடங்கள்—134 பேர்.

திருச்சி 20 இடங்கள்—164 பேர்.

ராமனாதபுரம் 14 இடங்கள்—86 பேர்.

திருநெல்வேலி 17 இடங்கள்—123 பேர்.

கன்னியாகுமரி 6 இடங்கள்—23 பேர்.

மதுரை 20 இடங்கள்—119 பேர்

நீலகிரி 2 இடங்கள்—16 பேர்.

கோவை 21 இடங்கள்—124 பேர்.

சேலம் 28 இடங்கள்—157 பேர்.

முறையீட்டைக் கேட்பதற்கும்

வாய்ப்பு அளிக்கவில்லையாம்!

அ.இ.கா.க. அலுவலகத்தின் முன்பு இருவர் உண்ணாவிரதம்

புதுடில்லி, சன 29—

பீகாரைச்சேர்ந்த ஜாகா பகுதியிலிருந்து கால்நடையாக வந்து டில்லியில் உள்ள அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கட்டிடத்தின் முன்னிலையில் இரு காங்கிரஸ் ஊழியர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

பீகாரில் பொதுத் தேர்தலில் போட்டியிட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் அபேட்சகர்களின் பட்டியலை அவர்கள் கண்டித்துள்ளனர். அவர்களுடைய முறையீட்டைக் கேட்பதற்குக்கூட வாய்ப்பு அளிக்கப்படவில்லையாம்!

மக்கள் சபைக்கு:

இந்தியப் பாராளுமன்ற—மக்கள் சபைக்கு சென்னைக்கான 41 இடங்களுக்கு மொத்தம் 206 பேர் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். எனவே மக்கள் சபைக்கு எல்லா இடங்களுக்கும் போட்டி உண்டு. மாவட்ட வாரியாக நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்திருக்கும் அபேட்சகர்களின் எண்ணிக்கை இங்கு தரப்படுகிறது:—

சென்னை வடக்கு தொகுதி—8 பேர்.

சென்னை தெற்கு தொகுதி—6 பேர்.

செங்கற்பட்டு இரு உறுப்பினர் தொகுதி—8 பேர்.

திருவள்ளூர் தொகுதி—5 பேர்.

வேலூர் இரு உறுப்பினர் தொகுதி—13 பேர்.

திருவண்ணாமலை தொகுதி—6 பேர்.

திருப்பத்தூர் தொகுதி—8 பேர்

கிருஷ்ணகிரி தொகுதி—5 பேர்.

திருச்செங்கோடு தொகுதி—9 பேர்.

சேலம் தொகுதி—8 பேர்.

சிதம்பரம் இரு உறுப்பினர் தொகுதி—8 பேர்.

திண்டிவனம் தொகுதி—5 பேர்.

கடலூர் தொகுதி—8 பேர்.

நாகபட்டினம் இரு உறுப்பினர் தொகுதி—7 பேர்.

குடந்தை தொகுதி—4 பேர்.

தஞ்சை தொகுதி—9 பேர்.

பெரம்பலூர் தொகுதி—6 பேர்

கரூர் தொகுதி—4 பேர்.

திருச்சி தொகுதி—7 பேர்.

புதுக்கோட்டை தொகுதி—7

இராமநாதபுரம் தொகுதி—8

ஸ்ரீவில்லிபுத்தூர் இரு உறுப்பினர்கள் தொகுதி—9 பேர்.

நாகர்கோயில் தொகுதி — 2 -

திருச்செந்தூர் தொகுதி — 4 பேர்.

திருநெல்வேலி தொகுதி — 7 பேர்.

தென்காசி தொகுதி — 3 பேர்.

பெரியகுளம் தொகுதி—6 பேர்.

மதுரை தொகுதி—5 பேர்

திண்டுக்கல் இரு உறுப்பினர் தொகுதி—8 பேர்.

கோபிசெட்டிப்பாளையம் தொகுதி—4 பேர்.

நாமக்கல் இரு உறுப்பினர் தொகுதி—8 பேர்.

பொள்ளாச்சி தொகுதி—2 பேர்.

கோவை தொகுதி—3 பேர்.

நீலகிரி தொகுதி—6 பேர்.

மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதவர் அலுவலகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளை 'உடனடியாக வெளியேறவிட வேண்டும்' என்று ரஷ்ய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதாம்.

கழகப் 'போஸ்டர்கள்' கண்டு கலக்கம்!

(நமது நிருபர்)

சென்னை, சன. 31—

"தமிழ் நாட்டில் புயலால்—அழிவு, அழுகுரல்! இரயில் விபத்தால் — பிணமலை, இரத்த வெள்ளம்! ஆறுதல் அளிக்க நேரு பண்டிதர் வரவில்லை; ஓட்டுக் கேட்க மட்டும் ஓடோடி வருகிறார்! நல்லோரே கூறுங்கள் — நீதி இதுதானா?"

என்று, தி. மு. கழகத் தலைமை நிலையம் வெளியிட்டுள்ள 'போஸ்டர்'கள் சென்னை நகரில் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன

மக்கள், கூட்டம் கூட்டமாக நின்று, ஆங்காங்கே 'போஸ்டர்'களைப் படித்துச் செல்கின்றனர். அவர்கள் இதயத்தில் கழகம் எழுப்பியுள்ள கேள்வி சுருக்கெனத் தைத்து, 'பண்டிதரின் பேச்சு மாற்றாந்தாய் மனப்போக்கு' என்பதை உணர்த்தி வருவது கண்டு, ஆளும் வட்டாரங்களும் அவர்களுக்கு வால் பிடிப்போரும் பெரும் கலக்கமுற்றிருக்கின்றனர்.

சில அதிதீவிர முற்போக்குவாதிகள்கூட இந்தப் 'போஸ்டர்'கள் கண்டு நிலைகுலைந்திருக்கின்றனர். அதன் விளைவாக, இதற்கு வியாக்கியானம் வேறு செய்யும் வேலையை, காங்கிரசாரிடமிருந்து இந்த முற்போக்குவாதிகள் தட்டிப் பறித்துக்கொண்டிருக்கின்றனர்.

'பண்டிதர்களின் சம்பளம் வாங்காத கூலியாட்களாக இந்த அதிதீவிர முற்போக்குவாதிகள், அந்த வேலை செய்ய முற்பட்டிருக்கின்றனரோ?' என்று கள்ளமில்லா உள்ளம் படைத்த மக்கள் கேட்கின்றனர்!

1951 தேர்தலில்!

சென்ற பொதுத் தேர்தலில் 3,826 இடங்களுக்கு 17,500 அபேட்சகர்கள் போட்டியிட்டனர். மொத்தம் 8½ கோடி வாக்காளர்கள், தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர்.

நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் சுமார் 18 கோடி வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளைப் பதிவு செய்வார்கள்.

சேதுபதிக்கு காங்கிரஸ் 'டிக்கெட்'!

பெரியவர்கள் தரும் 'சபாஷ்'

சென்னை, டிச 30—

தேவர் அழைப்பின் பேரில் டில்லி சென்று திரும்பியுள்ள சேதுபதி, தனக்குக் காங்கிரஸ் டிக்கட் கிடைக்கும் என்று நம்புவதாகவும், தான், தேவர், பண்டிதபந்த் ஆகியோருக்கு நிலைமை விளக்கியதாகவும் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

சரியே!

தான், காங்கிரஸ் டிக்கெட் கிடைக்கப் பெறாத நிலையிலும் சுயேச்சையாக அபேட்சா பத்திரம் தாக்கல் செய்தது சரியே என்று தேவர் கூறியதாகவும் சேதுபதி தெரிவித்திருக்கிறார்.

சபாஷ்!

இராமநாதபுரம் தொகுதியை காங்கிரஸ் இழந்துவிடாமல் பார்த்துக்கொண்டதற்காகப் பண்டித பந்த், 'சபாஷ்' கூறினாராம்!

குற்றவாளி அல்ல!

சுயேச்சையாக நியமனப் பத்திரம் தாக்கல் செய்தது, கட்சியின் ஒழுங்குமுறைக்கு ஊறு செய்தது ஆகாது என்றும் பெரியவர்கள் கூறிவிட்டனராம்!

'யூத எதிரி; கத்தோலிக்க எதிரி'

அமெரிக்கா வந்துள்ள சவூதி அரேபிய மன்னர் பற்றி கருத்து

நியூயார்க், சன. 29—

அமெரிக்க சர்க்காரின் அழைப்பின்பேரில் சவூதி அரேபிய மன்னர் சவூத் இங்கு வந்துள்ளார்.

அமெரிக்க 'ராசாங்க' இலாகா, மன்னருக்கு தக்க வரவேற்பு அளித்தபோதிலும், நியூயார்க் நகர சபைத் தலைவர் வரவேற்பளிக்க மறுத்துள்ளார்.

எதிரி!

'சவுத் மன்னர், யூத எதிரி; கத்தோலிக்க எதிரி' என்றும், 'அடிமைத்தனத்தை ஆதரிப்பவர்' என்றும் கூறி, வரவேற்பளிக்கவில்லையாம், அந்த நகர சபைத் தலைவர்.

சி. பி. சிற்றரசு

29—1—57 வேலூர் கலெக்டர் முன்னிலையில், திருப்பத்தூர் தொகுதி மக்கள் சபை (பாராளுமன்றம்)க்கு நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்.

எம். எஸ். மணி

25—1—57 அன்று, திருச்சி தொகுதி பாராளுமன்றத் தொகுதிக்குத் தோழர் எம். எஸ். மணி நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—1—'57 வியாழன்

அமைச்சர் அறிந்து கொள்ளட்டும்!

செங்கற்பட்டு தொகுதியில் மக்கள்சபைக்குப் போட்டியிடும் இயில்வே துணை அமைச்சர் அழகேசனார் அவர்கள், பொதுவாழ்வில் புகுந்த நாளிலிருந்தே, மாற்றுக் கட்சித் தலைவர்களைக் குடுக்குத்தனமாக எடுத்தேன்--கவிழ்த்தேன் எனத் தூற்றிப் பேசுவதில், நன்கு பயிற்சி பெற்றிருப்பவராவார். பொறுப்புள்ள அமைச்சர் பதவியில் அமர்ந்த பிறகும்கூட, அந்தத் தொட்டில் பழக்கம் அவரை விட்டுப் போக மறுப்பதில் ஆச்சரியமில்லை.

நமது கழக முன்னணி வீரர்களின் பெயர்களைச் சிதைத்தும், தம் விருப்பப்படி திருத்தியும் கூறி மகிழ்ந்த அளவுடன் இருந்துவிடவில்லை. நாம் நாடாளக் கூடாது என்பதற்கு, நமது கழகத்தவர்கள் பெற்றுள்ள பொருளறிவும் நாவன்மையுமே பெருந்தடைகளாகும் என்றுகூட, தமது கூர்ந்த மதியைக் காட்டிக் கொண்டுள்ளார் அமைச்சர் பெருந்தகை!

இதுபற்றி அமைச்சர் அழகேசனார் பொன்னேரி பொதுக் கூட்டத்தில் திருவாய்மலர்ந்திருப்பதை, சென்னை தேசிய இதழான 'நவ இந்தியா' வெளியிட்டுள்ளது. அது, இது:

"பள்ளியில் படிக்கும் சிறுவன் நன்றாகப் பேசலாம்—அதிக மார்க்குகள் வாங்கலாம்—மிகவும் புத்திசாலியாகக்கூட விளங்கலாம். அதற்காக அவனிடம் எந்தத் தந்தைதான் குடும்பப் பொறுப்பை ஒப்படைப்பார்? அனுபவம் இருந்தால் தானே—தக்க வயது வந்தால்தானே பொறுப்பைத் தர முடியும்? அதுபோலவே இன்று அரசாங்கம் என்ற குடும்பத்தின் தந்தையான ஓட்டர்கள், வயது வராத குழந்தைக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திடம் குடும்பப் பொறுப்பெனும் அரசாங்கப் பொறுப்பை ஒப்படைக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்."

அமைச்சர் வாயுரையிலிருந்து இரண்டு பொருட்கள் தெளிவாகின்றன. அதாவது, திராவிட முன்னேற்றக் கழகம் குழந்தைக் கட்சி என்பது ஒன்று; கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பில் இருப்பவர்கள் சிறுவர்கள் என்பது மற்றொன்று. இப்படி, முதியவர்களுக்கெல்லாம் முதியவராக இருந்துவரும் அமைச்சர் அழகேசனார் அருளியுள்ளார்.

அதே கருத்தைத்தான் மாஞ்சிக் கூட்டத்திலும் அழகேசனார் அளித்திருக்கிறார். அதே இதழில் அதுவும் தரப்பட்டு இருக்கிறது. அது, இது:

"பள்ளியில் மாணவர்களிடையே பேச்சுப் போட்டியில் ஒரு விஷயத்தைப்பற்றி வேண்டும்—வேண்டாம் என்று பலர் பேசுவார்கள். ஆனால் பரிசுகள் இரண்டு பக்கங்களைப்பற்றிப் பேசிய மாணவர்களுக்கும் கிடைக்கும். பரிசு வாங்கிய மாணவர்கள் உதாரணமாக, குடும்ப நிர்வாகம் பற்றிப் பேசியிருந்தால், அவர்கள் நன்றாகப் பேசினார்கள் என்பதற்காக அவர்களிடம் குடும்ப நிர்வாகத்தையே அவர்கள் பெற்றோர்கள் கொடுக்கலாம் என்பதில் எவ்வளவு அர்த்தம் இருக்குமோ, அதுபோன்றதுதான், தி. மு. க.விடம் அதிகாரத்தை ஒப்படைக்கலாம் என்பதும்; தி. மு. கழகத்தவர் பேச்சளவில்தான் எதையும் சொல்லுவார்கள்"

பெரிதும், இரண்டு ஊர்களிலும் அமைச்சர் அழகேசனார் அருளியுள்ள கருத்து ஒன்றுபோன்றே இருக்கிறது. இது, ஒலிப்பதிவு அல்ல; அமைச்சர் பலநாள் வெறும் வயிற்றுடன் இருந்து உருப்போட்டு வைத்துள்ள அரும்பொருளாகும்!

இவ்வாறு நமது கழகத் தலைவர்களைச் சிறுவர்கள் எனக் கேலி பேசும் அமைச்சர் அழகேசன், காய்ந்த சருகும் அல்ல—பழுத்த ஓலையும் அல்ல!

நமது கழகத் தலைவர்களும் துளிர் அல்லர்—குருத்தோலைகள் அல்லர்!

நமது கழகத் தலைவர்களைச் சிறுவர்கள் என நையாண்டி பேசும் அமைச்சரேகூட, நமது தலைவர்களின் நாவன்மையைத் தமையும் அறியாமலே ஒப்புக் கொண்டுள்ளார்.

அதிக மார்க்குகள் வாங்குகிறவர்கள் — புத்திசாலியாகக் கூட விளங்குகிறவர்கள் என்றும் அவர், வேண்டாவெறுப்பாக நமது தலைவர்களின் அறிவாற்றல் குறித்து அறிவித்துள்ளார்.

நன்றாகக் கற்றுள்ளவன்—அதிக மார்க்குகள் வாங்குகிறவன்—புத்திசாலியுங்கூட!

இப்படி ஒரு அருமந்த மகனிடம், குடும்பப் பொறுப்பை ஒப்படைப்பதைத்தான், தந்தை என்ற பெயருக்குரிய எவனும் விரும்புவான். அச்செயலைதான் அறிவுடையோர் பாராட்டுவர்.

ஆனால் அமைச்சரோ, மகன் அறிவாளிதான்; ஆற்றல் மிக்குடையோன்தான்; ஆசிரியர்களின் நற்சான்று பெற்றிருப்பவன்தான்; இருந்தாலும், அத்தகு பேராற்றல் படைத்தோனிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைக்கக்கூடாது என, தாம் பெற்ற செல்வம் குடும்பப் பொறுப்பேற்று திறம்பட நிர்வகிப்பது காணவேண்டும்—கண்டு மகிழவேண்டும் எனத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் தந்தையிடம் போதிக்கிறார்!

சொத்துக்குடையாரிடை பிணக்கேற்பட்டதின் காரணமாக, வேண்டுகோள்படி நீதிமன்றம் குறுக்கிட்டு, பிணக்குத் தீர்க்கப்படும்வரை சொத்தைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டுள்ள காப்பாளன் ஒருவன், சுயநலம் கருதி 'அவன் பித்தன், இவன் எத்தன்' எனக் கூறித் தனது குத்தகையை மேலும் நீடிக்கவேண்டும் என நீதிமன்றத்திலேயே வாதிடுவது போலத்தான் உள்ளது, அமைச்சர் அழகேசனார், நமது கழகத்தவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை வாக்காளர்கள் ஒப்படைக்கக்கூடாது என்பதும்!

பிணக்குக்குரிய சொத்தைக் காக்கும் பொறுப்பைப் பெற்றுள்ள காப்பாளனுவது, புத்திசாலித்தனமாக சொத்துக்குரியவனைப் பித்தன் எத்தன் என்று வது கற்பனை செய்து வாதிட முன்வந்தான். ஆனால் இந்த அமைச்சரோ, நமது கழகத்தவரை நாவலர்கள், அறிஞர்கள் என்றெல்லாம் சிறப்பித்துவிட்டு, அத்தகையவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்கக் கூடாது என வாக்காளர்களை வேண்டிக்கொள்கிறார்!

ஆசை வெட்கமறியாது! அமைச்சர் அழகேசனாருக்குரிய பதவி ஆசை, அவரை வெட்கத்தைத் துறக்கச் செய்திருப்பதுடன், அறிவையும் இழக்கச் செய்துவிட்டிருக்கிறது!

வாக்காளர்கள் பின்பற்றத்தக்கன என அருளியுள்ள பொன்மொழிகள் என்ன?

கற்றவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமரக்கூடாது!

நாவன்மை மிக்கவர்கள் அதிகாரத்தில் இடம் பெறக் கூடாது!

அறிவு பெற்றிருப்பவர்கள் நாடாளக் கூடாது!

அமைச்சர் அழகேசனார் அறிவிக்கிறார்— இல்லை—ஆணையிடுகிறார் வாக்காளர்களுக்கு, மேற்கண்டவாறு!

'எழுத்தறிவற்றவர்களைத் தேர்ந்தெடுங்கள்!'

'பித்தர்களைப் பொறுக்கி எடுங்கள்!'

'ஊமையர்களை ஊராளத் தேர்ந்தெடுங்கள்!'

எத்தர்களுக்கு வாக்களியுங்கள்!

இப்படி, அமைச்சர் அழகேசனார் தெளிவாகக் கூறவில்லையே ஒழிய, அவருடைய உட்கருத்து இதுவேதான் என்பதை, அவர் அருள்வாக்கு நமக்கெல்லாம் அறிவிக்கிறது.

நமது கழகத் தலைவர்கள் கற்றறிந்து வாதத்திறமை பெற்றிருப்பவர்கள்தானும்! இருந்தாலும் சிறுவர்களாம்; அதனாலே நாடாளத் தகுதியற்றவர்களாம்! அமைச்சர் அழகேசனார் தீட்டும் சித்திரம் இது!

நமது கழகத் தலைவர்களைச் 'சிறுவர்கள்' எனக் கூறியிருப்பதுகேட்டு, இப்படிக் கூறுகிற அமைச்சர் தொண்டு கிழவராகத்தான் இருக்கவேண்டும் என எவரும் எண்ணிடத்தான் செய்வர். ஆனால், உண்மையோ மாறுபட்டுக் கிடக்கிறது.

அமைச்சர் அழகேசனார் பல்போன கிழவர் அல்லர்! முதுமை காட்டும் முகத்தினர் அல்லர்! தளர்நடையினர் அல்லர்! வானப்பிரஸ்தாஸ்ரமத்தை அடைந்துவிட்டவருமல்லர்!

நமது கழகத் தலைவர்களில் பலரினும் இளையவர்! அமைச்சர் மொழியிலேயே குறிப்பிட வேண்டுமானால், அவர் 'கல்லைத் தின்று கல்லைச் செரிமானம்' செய்யக்கூடிய 'சிறுவர்'!

அவர்தான் நம்மைப் பார்த்து 'சிறுர்' எனக் கேலி பேசுகிறார்!

நமது கழகத் தலைவர்கள், அமைச்சர் அழகேசனார் கற்பனை மொழிப்படியே 'சிறுர்கள்' என்றே வைத்துக்கொள்ளுவோம். ஆனால் அவர்களில் பெரும்பான்மையினர், அவ்வேளை தொகுதியில் தேர்தலுக்கு நிற்கின்றனர் என்ற உண்மையை அமைச்சர் அறிந்திருக்க வேண்டும்.

நாடாளுவதற்குரிய அறிவும் ஆற்றலும் குறித்து அரசியல் சட்டத்திலோ, தேர்தல் சட்டத்திலோ திட்டவட்டமான விதி எதுவும் இயற்றப்பட்டு இருக்கவில்லையானாலும், நாடாளும் அமைச்சர்களின் வயது பற்றிய விதி வரையறுக்கப்பட்டுதான் இருக்கிறது. அந்த விதி கூறுகிறது, இருபத்தைந்து வயதுடையவர் எவரானாலும் சட்டசபைக்குள் வரலாம்—ஆட்சியைக் கைப்பற்றலாம்—என்று.

இப்படி ஒரு விதிக்குத் தேர்தல் சட்டத்திலே இடமளித்துவிட்டு, அதுவும் இடமளித்த காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் அழகேசனாரே, அவ்விதியின்படி வயது பெற்றுத் தேர்தலில் போட்டியிடும் நமது கழகத் தலைவர்களைக் குறித்து 'சிறுவர்கள்', குடும்பப் பொறுப்பு போன்ற ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தகுதியற்றவர்கள்—எனவே அவர்களுக்குத் தந்தையர் போன்றுள்ள வாக்காளர்கள் ஆதரவு காட்டக்கூடாது எனப்பேசுவது என்றால், அவரை அரசியல் சூதர் என்பதா? அறியாமையின் பேருருவம் என்பதா?

வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையளித்துவிட்டோம் எனப் பெருமைபடப் பேசிக்கொள்ளுவது--அதே நேரத்தில் அந்த வாக்குரிமையின் விதிப்படி தேர்தலில் கலந்து கொள்ளும் நம கழகத்தவர்களை 'சிறுவர்கள்' எனக் கேலிபேசி, ஆதரிக்காதீர் என வாக்காளர்களுக்கு உபதேசம் செய்வது!

தேர்தல் சட்டத்தை இயற்றும்போது, இருபத்தைந்து வயது வந்தவர்கள் சிறுர்களாயிற்றே என்று எண்ணாது, அவ்வயது பெற்றிருப்பவர்கள் தேர்தலில் போட்டியிடும் பொழுது மட்டும், விதியை மறந்து, மதியை இழந்து பேசுவதை, எந்தவித நியாயத்தில் சேர்ப்பது? அதிலும் ஒரு அமைச்சர் பேசுவது மன்னிக்கத்தக்கதோ, மறக்கத்தக்கதோ ஆகுமோ?

இருபத்தைந்து வயது பெற்றிருக்கும் எவரும் தேர்தலில் போட்டியிடலாம்— ஆட்சியில் அமரலாம் என்று தாங்களே விதி செய்துள்ளோம் என்ற உண்மையை அமைச்சர் அழகேசனார் அறிந்திருப்பவர் அல்லர் என நாம் கூறமாட்டோம். அறியாமைக் குற்றத்தை அவர் மீது சுமத்திப் பேச அவருக்குள்ளது போன்ற பண்பை நாம் பெற்றிருக்கவில்லை.

ஆனால் வாக்காளர்கள், அமைச்சர் அழகேசனார் குறித்து, 'உண்மையை மறைத்துப் பேசும் அரசியல் எத்தர்' என்றுதான் தீர்மானித்துக் கொள்ளுவர்—அவர் வீற்றிருக்கும் உயர்ந்த இடத்திலிருந்து இழுத்துத் தள்ளிடவும் செய்வர் இந்தத் தேர்தலில்!

பொதுத் தேர்தல்

சென்னையில் போட்டி நிலவரம்

சென்னை சன. 29—

இன்றுடன் டில்லி பாராளு மன்றத்திற்கும், சென்னை சட்டசபைக்கும் போட்டியிடும் அபேட்சைப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் கடைசிநாள் முடிந்து விட்டது.

சென்னை தேர்ந்தெடுக்க வேண்டிய இரு மக்கள்சபைத் தொகுதிக்குப் போட்டியிட மொத்தம் ஒன்பதுபேர் தங்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

சென்னை சட்டசபைக்கான 10 இடங்களுக்கு உள்ள 9 தொகுதிகளில் மொத்தம் 48 பேர் போட்டியிட தங்கள் அபேட்சைப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

மக்கள் சபைக்கு!

'ஏசுநாதர்' போட்டியிடுகிறர்!

புதுடில்லியில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது

புதுடில்லி, சன. 30—

புதுடில்லியிலிருந்து, மக்கள் சபைக்குத் 'தேர்ந்தெடுக்க'ப்படுவதற்காக 'ஏசுகிறிஸ்து' ஒரு அபேட்சகராக நிறுத்தப்பட்டிருக்கிறார்!

'அவரை' நியமித்துப் பத்திரம் தாக்கல் செய்துள்ள ஒருவர், தானும் 'ஏசுகிறிஸ்து' என்று கையெழுத்துப் போட்டிருக்கிறாராம்.

இந்த நியமனப்பத்திரத்தை இவர், தபாலில் அனுப்பிவைத்தாராம்! அது வந்து சேர்ந்ததா என்று கேட்டுப்போக நேற்று மாலை தேர்தல் அதிகாரியின் அலுவலகத்திற்கு வந்தாராம்! அவர், தான், 'பரமண்டலப் பிதா'வின் பிரார்த்தனை இலாகாவில் வேலை செய்வதாகவும் கூறினாராம்!

அதிகாரிகள் நியமனப்பத்திரம் வந்ததாகவும், ஆனால் 'டிபாசிட்' பணம் வராததால் அந்த மனு செல்லாதெனத் தீர்ப்பளிக்கப்படும் என்றும் கூறினாராம்!

சென்னை நகரில்

தேர்தல் அலுவலகம்

சென்னை, சன. 28—

சென்னை நகரத்தில் பொதுத் தேர்தலின்போது பணிபுரியும் அதிகாரிகளுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் பயிற்சியளிக்க வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், நகராட்சி மன்றத்திற்கு அருகாமையில் உள்ள விக்டோரியா மண்டபத்தில் காலை 11 மணிமுதல் மாலை 5 மணி வரையில், கடமையாற்றவேண்டிய அதிகாரிகளுக்கும் பணியாளருக்கும் தேவையான விளக்கங்கள் தரப்படுகின்றனவாம்.

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களும் அவர்களது ஏஜெண்டுகளும், இந்தத் தேர்தல் அலுவலகத்தின் உதவியைக் கொண்டு சரியான முறையையும், மற்ற விளக்கங்களையும் பெறலாம்.

விடுதலைப் போரில் மற்றுமோர் கட்டம்

அல்ஜீரியாவில் மகத்தான வேலை நிறுத்தம்

அல்ஜியர்ஸ், சன. 30—

பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலை கோரிப் புரட்சியில் ஈடுபட்டிருக்கும் அல்ஜீரியாவில், கடந்த இரு நாட்களாக மகத்தான தோர் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

அல்ஜீரியாவின் பல பாகங்களிலும், தொழிற்சாலைகளும் கடைகண்ணிகளும் இரு நாட்களாக மூடிக் கிடக்கின்றன.

அல்ஜீரிய தேசியவாதிகள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த வேலை நிறுத்தம் நடைபெறுகிறது

பாரிசில்

அல்ஜீரியாவில் மட்டுமின்றி, அல்ஜீரிய தொழிலாளர்கள் ஏராளமாக உள்ள பாரிஸ் நகரிலும், இன்னும் சில பிரெஞ்சு நாட்டு நகரங்களிலும் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.

பாரிசில் உள்ள பெரிய மோட்டார் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அல்ஜீரியத் தொழிலாளர் அனைவரும் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

மேலும், மொராக்கோவிலிருந்து பெர்சிய வளைகுடா வரை உள்ள எல்லா அராபிய நாடுகளிலும் அல்ஜீரிய விடுதலைப் போருக்கு ஆதரவாக ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

அல்ஜீரிய விவகாரம், மீண்டும் ஐ. நா. பொதுச் சபையின் விவாதத்திற்கு அடுத்த வாரம் வரும் என்று தெரியவருகிறது.

தமிழ்நாட்டில்நிறுவப்படும் 'மாபெரும்' தொழில்கள்!

'அகில இந்தியா'க்களுக்கு அர்ப்பணம்

மதுரை, சன. 29—

பனை ஓலையிலிருந்து சாமான்கள் உற்பத்திச் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள 20 பேருக்கு இராமநாதபுரம் தாலுகா சித்தார் கோட்டையில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பயிற்சி முகாமில் பனை ஓலைச் சாமான்களை அபிவிருத்தி முறைகளில் உற்பத்தி செய்வதற்கான பயிற்சி அளிக்கப்படுமாம்.

ஆறு மாதங்கள் சென்ற பிறகு, அந்தப் பயிற்சி முகாம், தொழில் கூட்டுறவு உற்பத்தி நிலையமாக மாற்றப்படுமாம்.

இந்தத் திட்டத்திற்கு துவக்கத்தில் ரூ. 1,250-ம், ஆண்டு தோறும் ரூ. 14,381-ம் செலவாகுமாம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ 65 மதிப்புள்ள மூலப் பொருள்களும் துணைச் சாதனங்களும் கடனாகத் தரப்படும்; இவ்வாறு 100 - குடும்பங்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்தத் திட்டத்திற்காக ரூ - 9,000 மானியமாகவும், ரூ. 6,000 கடனாகவும் மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறதாம்.

★

சேலத்தில் கண்ணாடி வளையல் தொழிற்சாலையாம்

சேலம் கிருஷ்ணகிரி தாலுகா கெடிமார்த்தியில், விரைவிலேயே கண்ணாடி வளையல் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படுமென்றும், அத்தொழிற்சாலையை பெரிய சாலையுடன் இணைத்து ரூ 18,500 செலவில் ஐந்து பர்லாங் நீளத்திற்கு பாதை அமைக்கப்படுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

★

பனை மரத்திலிருந்து பொருள் உற்பத்தி நிலையம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவப்படுமாம்

விருதுநகர், சன 29—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மேலப்பசாலை எனும் கிராமத்தில் பனைமரத்தைக் கொண்டு கட்டில் முதலிய பொருட்களைச் செய்வதற்கு ஒரு உற்பத்தி—பயிற்சி நிலையம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது

இரு ஆண்டுகள் இந்நிலையம் அரசாங்கத்தால் நடத்தப்படுமென்றும் பின்னர் தொழில்கூட்டுறவு நிலையமாக மாற்றப்படுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

30 பேர் இந்நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுவரென்றும், பயிற்சியின்போது ஒவ்வொருவரும் மாதம் ரூ. 20 உபகாரச் சம்பளம் பெறுவர் என்றும் தெரிகிறது.

இந்நிலையம் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் ரூ 18,900 மானியமாகவும், ரூ 31,000 கடனாகவும் அளித்திருக்கிறது.

இந்நிலையத்தின் மூலதனச் செலவிற்கு ரூ 9,500; ஆண்டு தோறும் ரூ. 20,800; வேண்டிய பொருட்கள் வாங்குவதற்கு ரூ 34,000 செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது

பனை நாரிலிருந்து பிரஷ்கள் செய்வதற்கு ரூ 8,000 செலவில் இன்னொரு பயிற்சி நிலையம் ஏற்படுத்துவதற்குச் சென்னை சர்க்கார் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

★

சாயம் தோய்ப்பதற்கு பயிற்சி அளிக்கும் நிலையம்

இராசபாளையத்தில் நிறுவப்படும்

இராசபாளையத்தில் இம்மாத இறுதிக்குள் சாயம் தோய்ப்பு—அச்சிடுதல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது. இந்நிலையம், இராசபாளையம் கதர் உற்பத்தி நிலையத்துடன் சேர்ந்து செயல்படும் என்று தெரிகிறது.

துணி, கோரைப் பாய் முதலியவைகளில் புதிய முறையில் சாயம் தோய்த்தல்—அச்சிடுதல் முதலியவைகளில் பயிற்சி அளிப்பதற்காக இப்பயிற்சி நிலையம் அமைக்கப்படுகிறதாம்.

இப்பயிற்சி நிலையத்தில் 12 பேர் பயிற்சி காலத்தில் மாதம் ரூ 25 உபகாரச் சம்பளம் பெறுவர் என்றும் தெரிகிறது.

இப்பயிற்சி நிலையத்திற்கு ஆகும் மூலதனச் செலவுக்கு ரூ. 7,400-மும், ஆண்டுச் செலவுக்கு ரூ 18,100-மும் மத்திய அரசாங்கம் மானியமாகத் தருமாம்.

• • •

12-பேருக்குப் பயிற்சியளிக்க பொறியியல் நிலையமாம்!

இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் இராசபாளையத்தில் ஒரு பொறியியல் வேலை நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் ரூ. 4-இலட்சம் அனுமதித்திருக்கிறதாம்

நவீன கருவிகளை இயக்குவது பற்றி இங்கு 12 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தப் பொறியியல் வேலை நிலையம் ஏற்படுத்துவதற்கென சுமார் ரூ 1 இலட்சம் பெறுமான இயந்திரங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன.

★

துணி பொம்மைகள் உற்பத்தி நிலையம்

பரமக்குடியில் ரூ 20,900 செலவில் துணி பொம்மைகள் செய்வதற்கு ஒரு நிலையம் அமைக்கும் திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையிலிருப்பதாகத் தெரிகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் 20 மாணவர்கள் ஒரு வருடம் பயிற்சி பெறுவர். பயிற்சியின் போது மாதம் ரூ 20 உபகாரச் சம்பளம் தரப்படும் பயிற்சி முடிந்த பின் அப்பயிற்சி நிலையம் கூட்டுறவுத் தொழில் நிலையமாக மாற்றப்படும் என்று தெரிகிறது.

***

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் :

போலிகட்குப் போடாதே ஓட்டு!

[ஏற்ற இசையில் பாடுக]

★

தேர்தல் வருகுதம்மா ! —கண்ணம்மா!
தேடி வருவாரம்மா
நல்லவரைத் தெரிந்து, —கண்ணம்மா!
நாடியே ஓட்டுப் போடு!

வெள்ளிப் பணம் கொடுப்பார்!—கண்ணம்மா!
வீடு வீடாகச் செல்வார்!
பொன்னும் பொருளும் காட்டி—கண்ணம்மா!
போதை உண்டாக்கி வைப்பார்!

காரில் பவனி வந்து, —கண்ணம்மா!
கண்கட்டி வித்தை செய்வார்!
காலம் முடிந்து விட்டால் —கண்ணம்மா!
காலால் உதைத்திடுவார் !

ஏழடுக்கு மாளிகை, —கண்ணம்மா!
இங்கேபார் என்று சொல்வார்!
ஏமாந்து போகாதே! —கண்ணம்மா!
எண்ணி உன் ஓட்டுப்போடு!

வண்ணத்தைப் பார்க்காதே! —கண்ணம்மா!
வாளுக்கும் அஞ்சாதே!
பொன்னான உன் ஓட்டு, —கண்ணம்மா!
போடாதே போலி கட்கு!

நாடு செழிக்க வேண்டும்! —கண்ணம்மா!
நாம் எல்லாம் வாழவேண்டும்!
நல்லவர் ஆள வேண்டும்! —கண்ணம்மா!
நானே உன் ஓட்டு வேண்டும்!

காங்கிரஸ் நமக்கு வேண்டாம்! —கண்ணம்மா! (அவர்)
காசும் நமக்கு வேண்டாம்!
தங்கத்தில் தங்கமம்மா! —கண்ணம்மா
தன்மானம் வேண்டுமம்மா!

இன்னுயிராம் உன் ஓட்டு!—கண்ணம்மா!
உன் அண்ணா தம்பிக்குத்தான்!

—கே. பி. தங்கமணி

***

வனத்துறைச் செல்வம் அபிவிருத்தியாகுமாம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இந்தியாவின் வனத்துறைச் செல்வத்தை அபிவிருத்தி செய்வதற்காகச் சுமார் ரூ 24 கோடிக்கும் அதிகமாகச் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

***

தி. மு. க.—தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

சென்னை-எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
10—2—57 ஞாயிறன்று நடைபெறும்

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவார்.

- ★ நாட்டுக்கு நல்லாட்சி
- ★ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
- ★ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
- ★ தி. மு. கழகமும் பொதுமக்களும்
- ★ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி	சி. பி. சிற்றரசு
கே. ஏ. மதியழகன்	சத்தியவாணிமுத்து
க. அன்பழகன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	நாஞ்சில் மனோகரன்

ஆகியோரின் விளக்க உரைகள்

இரவு 10-மணிக்கு—நாடகம் உண்டு

மற்ற விவரங்கள் அடுத்து அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

***

கழகச் செய்திகள்

தண்டுரை—பட்டாபிராம்

27—12—56 அன்று மாலை தண்டுரை பட்டாபிராம் தி மு. கழகச் சார்பில் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தேர்தல் நிதிக்கு தண்டுரை-பட்டாபிராம் தி. மு. கழகச் சார்பில் ரூ 101 தரப்பட்டது.

வேளாக்குறிச்சி :

7—1—57 அன்று கள்ளக்குறிச்சி வட்டம் வேளாக்குறிச்சியில் தோழர் கி. நடராசன் தலைமையில் தி மு கழகக் கிளை துவக்க விழா நடைபெற்றது தோழர்கள் இரெ. இளம்வழுதி, நாராயணன், மு. பாண்டியன், இராமகிருட்டிணன், இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கிளைக் கழகச் சார்பில் தோழர் இராமசாமி அவர்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதியாக ரூ 27 தோழர் இரெ. இளம்வழுதி அவர்களிடம் அளித்தார்.

ஏலையமுத்தூர் :

17—1—57-ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், செயலாளர் தோழர் க. வில்லன் அவர்களுடைய விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் மு. கிட்டு புதிய செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பெங்களூர்—சீராமபுரம் :

20—1—57 பகல் 12 மணிக்கு, கிளைக் கழகப் பணிமனையில் தோழர் சு. கண்ணன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், நூல் நிலைய வளர்ச்சி நிதிக்காக 17—2—57-ல் 'வீரவாலி' நாடகம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

தும்மலக்குண்டு

14—1—57 அன்று இவ்வூரில் தி. மு கழகக் கிளை துவக்க விழா தோழர் கொ. கிட்டு தலைமையில் நடைபெற்றது. தோழர் மு வசனப் பித்தன் கொடியேற்றுவித்தார். தோழர் பி. சமதர்மம் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

கள்ளக்குறிச்சி :

12—1—57 அன்று தோழர் அம்பாயிரம் தலைமையில் நடைபெற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சி. பி சிற்றரசு, மு. பாண்டியன், தங்கவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கரிசல்குளம் :

1—1—57ல் சங்கரன்கோவில் வட்டம் கரிசல்குளம் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் டபிள்யூ. டி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. ஆர். சுப்பிரமணியம், எஸ். கவிஞன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சங்கரன்கோவில் தொகுதிக் குழு :

16—1—57ல் சங்கரன்கோவில் தொகுதிக் குழு உறுப்பினர் கூட்டம் கடையாலூர் கிளைக் கழக அலுவலகத்தில் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. நடராசன், பி. ஆறுமுகம், பி. ஏ. சங்கரதாஸ், பெரியநாயகம் ஆகியோர் பேசினர். 13-10-56 முதல் 16-1-57 வரையுள்ள கழக வரவு செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. மற்றும் சில முக்கிய முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை 35-வது வட்டம்:

20—1—57 காலை 9 மணிக்கு மேற்படி வட்டத் தி. மு. கழகப் பணிமனையில் (50/3 ஆற்காட்டுச் சாலை, கோடம்பாக்கம்) திறப்பு விழா, தோழர் கோ. கிருட்டிணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது தோழர் இ வடிவேலன் கழகக் கொடியேற்றினர். தோழர் வ. சங்கரநாராயணன் கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், கோ. செங்குட்டுவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

***

உலகத்தின் எந்தப் பாகத்திற்கும் பாயும் குண்டு!

ரஷ்யா கண்டுபிடித்திருக்கிறதாம்

டோக்கியோ, சன 30—

புதுமாதிரியான அணுகுண்டு ஒன்றை ரஷ்யா கண்டுபிடித்திருக்கிறதாம்.

ரஷ்யாவிலிருந்துகொண்டே தருப்புகள் குறிவைத்து உபயோகித்தால் உலகத்தின் எந்தப் பாகத்திற்கும் சென்று அக்குண்டு நாசம் விளைவிக்குமாம்.

இந்தியாவிற்கு வந்துள்ள ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

விசாரணையின்றியே தள்ளுபடியாயிற்று!

பம்பாய், சன. 28—

இரு மொழி பம்பாய் மாநிலம் அமைக்கப்பட்டது செல்லுபடியாகாதென்று தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை பம்பாய் உயர் நீதிமன்றம் விசாரணை இன்றியே தள்ளுபடி செய்திருக்கிறது.

வியட்நாம், கொரியா நாடுகளுக்கு ஐ. நா.-வில் இடம்

முயற்சியில் அமெரிக்காவின் பாரபட்சம்!

ஐ நா. நியூயார்க், சன 28—

பிளவுபட்டுக்கிடக்கும் இரு இழிந்த நிலைநாடுகளான கொரியா, மற்றும் வியட்நாம் நாடுகளுக்கு ஐ நா-வில் இடமளிக்கவேண்டும் என்ற பிரச்சினையை, ஐ நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்வதென இந்தியா, மற்றும் சிரியா முடிவு செய்துள்ளன.

மேலும், தெற்கு - வடக்கு கொரியா நாடுகளுக்கும், தெற்கு - வடக்கு வியட்நாம் நாடுகளுக்கும் ஐ நா. - வில் இடமளிக்க வேண்டும் என்று ரஷ்யா கொண்டு வந்துள்ள தீர்மானமும் ஐ நா பாதுகாப்புச் சபையின்முன் உள்ளது. ஆனால் தென்வியட்நாம் தென் கொரியா ஆகிய இருநாடுகளுக்கு மட்டும் ஐ நா - வில் இடம் வேண்டுமென அமெரிக்காவும் மற்றும் 11 நாடுகளும் தீர்மானம் ஒன்று கொண்டு வந்துள்ளன வாம்.

சீனப் பிரதமர் கூற்று

அமெரிக்கத் தூதுவர் மறுப்பு

புதடில்லி, சன 30—

அமெரிக்காவிலுள்ள சீனர்கள் நாடு திரும்ப விரும்பினால் அமெரிக்க அரசாங்கம் எந்தச் சமயத்திலும் அவர்களை தடுத்தது இல்லை யாது என்றும், இதில் சந்தேகமிருப்பின் வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதுவரை நேரடியாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றும் சீனப் பிரதமர் சூ-என்-லாய் வெளியிட்ட கருத்துக்களை மறுத்து இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்காவுக்கு வர முடியாது!

பெல்கிரேட், சன 30—

யூகோஸ்லேவியா குடியரசு தலைவர் மார்ஷல் டிட்டோ, அமெரிக்கா செல்வதற்கில்லை என்று அதிகார பூர்வமான செய்திப் பத்திரிகையான போர்பா' எழுதியிருப்பதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவில் யூகோவுக்கு எதிரான பிரசார இயக்கம் நடைபெறுவதே இதற்குக் காரணமாம்!

ஊருக்குத்தான் உபதேசமா?

காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேச்சு வார்த்தை கிடையாதாம்

டில்லியின் முடிவு?

புதடில்லி, சன. 30—

காஷ்மீர் விவகாரம் குறித்து பாகிஸ்தானுடன் இனி எந்த விதப் பேச்சுவார்த்தையும் நடத்துவதற்கில்லை என்று இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பாகிஸ்தான் நிலை

பாகிஸ்தான், காஷ்மீர் விவகாரம் குறித்து இந்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயாராயிருப்பதாகவும், பேச்சுவார்த்தைகள், ஐ நா. மத்தியஸ்தரான டாக்டர் கிரஹாம் 4 ஆண்டுகளுக்கு முன் விட்டுச் சென்ற இடத்திலிருந்து துவக்க வேண்டுமென விரும்புவதாகவும் கிடைத்த தகவலின் பேரிலேயே டில்லி பேரரசு இந்த முடிவுக்கு வந்திருப்பதாயும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

எல்லாம் நேருவே!

புதடில்லி, சன. 30—

தற்காப்பு இலாகா பொறுப்பையும் நேரு பண்டிதரே மேற்கொண்டிருக்கிறாராம்.

இந்த இலாகா மந்திரியாயிருந்த டாக்டர் கே. என். கட்ஜு, மத்திய பிரதேச மாநில மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டதினால் அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்து விட்டார். எனவே அந்த இலாகா பொறுப்புகளையும் பண்டிதரே தமது தலையில் தூக்கிவைத்துக்கொண்டாராம்.

தென்னப்பிரிக்க இன வெறி!

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த ஐ. நா. உத்தரவு

நியூயார்க், சன. 30—

தென்னாப்பிரிக்க 'இந்தியர்' பிரச்சினை குறித்து ஒரு சமூகமான முடிவுக்கு வரும் பொருட்டு இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா ஆகிய மூன்று சர்க்கார்களும் கூடிப் பேசவேண்டும் என்று ஐ நா. பொதுச் சபை தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 42 வாக்குகள் பதிவாயின; எதிர்த்து ஒருவரும் ஓட்டளிக்காவிட்டாலும் 12 பேர் நடுநிலை வகித்தனராம்.

வார்சா ஒப்பந்தம் பலப்படுத்தப்படுமாம்!

லண்டன், சன. 30—

வார்சா ஒப்பந்தத்தை பலப்படுத்த வேண்டுமென ரஷ்யாவும் செகோஸ்லோவேகியாவும் கூட்டறிக்கை ஒன்று விடுத்துள்ளனவாம்.

மேற்கு வல்லரசுகள் ரஷ்யாவின் சமாதானத் திட்டங்களை ஏற்கவும் வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தைக் கலைக்கவும் மறுத்துவிட்டதாலேயே, வார்சா ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதாம்.

மாஸ்கோ வானொலி இத்தகவலை வெளியிட்டுள்ளதாம். முடிவு கிரெம்ளினில் நேற்று ரஷ்ய—செகோஸ்லோவேகிய தலைவர்களிடை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டதாம்.

பண்டித நேருவுடன் திருமதி மவுண்ட்பாட்டன்

சென்னை, சன 31—

பண்டித நேரு, இன்று சென்னை வரும்போது, அவருடன், இந்தியாவின் முன்னாள் கவர்னர்-ஜெனரலான மவுண்ட்பாட்டனின் துணைவியார் திருமதி மவுண்ட்பாட்டனும் வருவார் என்றும், நகரில் அவர் இரண்டொரு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார் என்றும், திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அவருக்கு தேநீர் விருந்து ஒன்று அளிப்பார் என்றும் தெரிய வருகிறது.

30,000 கோழிக் குஞ்சுகள் இந்தியாவுக்கு வருகிறதாம்

வடகிழக்கு அமெரிக்கப்பண்ணைகளிலிருந்து 30,000 கோழிக் குஞ்சுகளும், 8,000 குஞ்சு பொரிக்காத முட்டைகளும் அடுத்த மாதம் விமானம் மூலம் புதுடில்லிக்குக் கொண்டுவரப்படுமாம்.

இந்தியக் கோழி வளர்ப்பு அபிவிருத்தி அடைய உதவும் இந்த நடவடிக்கை, இந்தியாவுக்கு அமெரிக்கா அளிக்கும் பொருளாதார உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாகுமாம்.

யுத்தத்தின் பலன்?

லண்டன், சன. 30—

எகிப்தின்மீது அநியாயப் போர் தொடுத்த பிரிட்டன், இராணுவச் செலவுக்காக சுமார் 3 கோடி பவுன் பாழாக்கியிருக்கிறது. இந்தத் தொகை சுமார் 38 கோடியே 07 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயாகும்!

இராணுவச் செலவுக்காக ஒரு உபரி மானியக் கோரிக்கை — ரூ 52 கோடிக்கு பிரிட்டிஷ் மக்கள் சபையில் சர்க்காரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதாம்.

சென்னை—பேசின்பிரிட்ஜ் தொகுதியில்

தேர்தல் ஊர்வலம்

3—2—57 காலை 7 மணிக்கு, சென்னை — பேசின்பிரிட்ஜ் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில், தேர்தல் ஊர்வலம் நடைபெறும். இத்தொகுதியைச் சேர்ந்த கழகக் கிளைகள் (5, 7, 8, 16, 27-வது வட்டங்கள்), மன்றங்கள், பிற அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒற்றைவாடை தியேட்டருக்கு எதிரிலுள்ள பிள்ளையார் கோயில் தெரு 27-வது வட்டத் தி. மு. கழக அலுவலகத்திற்கு முன் இருந்து ஊர்வலம் புறப்படும்.

சென்னை 17-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

2—2—57 இரவு 8 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில், கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தல் பணி குறித்து ஆலோசிக்கப்படும்.

கே. வி. கே. சாமி கொலை வழக்கு

திருநெல்வேலி, சன. 30—

தோழர் கே. வி. கே. சாமி கொலை வழக்கு விசாரணை இங்கு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

செஷன்ஸ் நீதிபதி ஏ. நாகசாமி ஐயர், வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கிறார்.

நேற்று, இரண்டாவதும் கடைசியுமான சாட்சியாக தூத்துக்குடி இரயில்வே நிலையத்தைச் சேர்ந்த தும ஸ்தா இராமநாதன் என்பவர் தனது வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார்.

அவரை சர்க்கார் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்திருக்கிறார். விசாரணை இன்னும் முடியவில்லை; தொடர்ந்து நடைபெறும்.

இந்தியாவெங்கும் காந்தியார் நினைவுநாள்

புதடில்லி, சன. 30—

இன்று இந்தியாவெங்கிலும் காந்தியார் நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள், இந்த நினைவு நாளில், உத்தமர் காந்தியாருக்குத் தங்களின் வீரவணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்தியிருக்கின்றனர்.

டில்லியில்:

டில்லியில் உள்ள காந்தி சமாதிக்கு மலர் மாலை அணிவித்து டாக்டர் இராசேந்திர பிரசாத், டாக்டர் இராதாகிருஷ்ணன், பண்டித நேரு, தேபர் ஆகியோர் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

சென்னையில்:

சென்னையில், காந்தியார் நினைவு நாளான இன்று ஒரு 'தூய்மைக் கருத்தரங்கு' இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

தியாகிகள் தினம்

காந்தியார் மறைந்த சன. 30-ந் தேதி தியாகிகள் தினமாகக் கொண்டாடப்படுவதையொட்டி, காலை 11 மணிக்கு வேட்டுகள் வெடித்ததும், அனைவரும் இரண்டு நிமிட நேரம் மௌனமாயிருந்து, தியாகிகளுக்குத் தங்கள் வீரவணக்கத்தைச் செலுத்தினர்.

★★★★-★★★★★★★★★★-★★★★

தி. மு. கழக அபேட்சகர்கள்

கவனத்திற்கு:

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் கொள்கை களை விளக்கி, 9—2—57-ல், 'தேர்தல் கார்டூன்' மலராக வெளிவரும் 'தனி அரசில்', தி. மு. கழக அபேட்சகர்களின் புகைப்படங்களை வெளியிட வேண்டியிருப்பதால், ஒவ்வொரு அபேட்சகரும் உடனே சிறிய புகைப்படம் ஒன்று அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
4, பி. பி. ரோடு, சென்னை-5

★★★★★★★★★★-★★★★-★★★★

தொகுதிக் குழுக் கூட்டங்கள்

★

சென்னை—ஆயிரம்விளக்கு:

2—2—57 இரவு 8-மணிக்கு சென்னை—மவுண்ட்ரோட், ஓட்டல் இந்தியாவிற்கு எதிரிலுள்ள பன்னீர்செல்வம் படிப்பகத்தில், (2/142 மவுண்ட் ரோடு), சென்னை — ஆயிரம் விளக்கு தொகுதி—(24, 33, 34 37, 38-வதுவட்டம்) தி. மு. கழகக் கிளைகள், மன்றங்களைச் சேர்ந்த தோழர்களடங்கிய தொகுதிக் குழுக் கூட்டம் நடைபெறும். அமைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்வார்.

சென்னை—37-வதுவட்டம்:

4—2—57 இரவு 8-மணிக்கு சென்னை—37-வது வட்டத்தில், தேர்தல் குழு ஒன்று அமைக்க வேண்டியிருப்பதை யொட்டி கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற இருக்கும் அமைப்புக் கூட்டத்தில், கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வேலூர் (வ. ஆ.)

3-2-57 காலை 9 மணிக்கு வேலூர் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத்தில் (கமிஷரி பஜாரில்) கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். தோழர்கள் அனைவரும் தவறாது வருகை தரக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திருச்சி

3-2-57 இரவு 10 மணிக்கு, திருச்சி 'திராவிடப் பண்ணை'யில், தேர்தல் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறும். தி. மு. கழக உறுப்பினர்களும், கழக ஆதரவாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பெரம்பலூர்

6—2—57 பிற்பகல் 2-மணிக்கு, பெரம்பலூர் தி. மு. கழகத் தொகுதிக் குழுக் கூட்டம், பெரம்பலூர் சத்திரத்தில் நடைபெறும் தொகுதி கிளைக் கழக நிர்வாகிகள், அனுதாபிகள் அனைவரும் கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேனி (மதுரை)

6—2—57ல், தேனி தி. மு. கழகத் தொகுதிக் குழு உறுப்பினர் கூட்டம் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் முன்னிலையில் நடைபெறும். கிளைக் கழகத் தோழர்கள் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி:

பாலக்கரை எடத்தெரு கிளைக்கழக 4 வது ஆண்டுவிழா
2—2—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: காமாட்சி
பேசுவோர்:
டி. கே. தாமரைச்செல்வன்
எம். எஸ். மணி
அன்பில் தர்மலிங்கம்
தோ. ப. கோபாலகிருட்டிணன்

★

திருச்செங்கோடு:

40 கால் மண்டபத்தின் முன்
2—2—57 மாலை 4½ மணிக்கு
தலைவர்: எஸ். பி. இரங்கசாமி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
ஈ. வெ. கி. சம்பத்

★

குமாரபாளையம்:

சந்தைப்பேட்டை மைதானத்தில்
2—2—57 மாலை 6-30மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். இரங்கசாமி

★

கீழப்பாவூர்:

1—2—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
எஸ். நெடுமாறன்
எஸ். இராமசாமி
பி. குமாரசாமி
ம. இராசு

சென்னை 17-வது வட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகம் திறப்பு

26—1—57 காலை 10 மணிக்கு பெரம்பூர் பாரக்ஸ் வீதியில் (திரு வி. க. நிலையத்திற்கு அருகில்) எண் 110 இல்லத்தில், தோழியர் சத்தியவாணி—முத்து அவர்களால் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

தி. மு. கழகத் தேர்தல் நிதி நாடகம்

2—2—57 இரவு 10 மணிக்கு இராசிபுரம் இரங்கவிலாஸ் தியேட்டரில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையிலும், தோழர் ஈ. வெ. கி சம்பத் முன்னிலையிலும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி குழுவினரின் 'வேலைக்காரி' நாடகம் நடைபெறும்.

திருத்தம்

நேற்று, (30—1—57 சென்னை) 'நம் நாடு' இதழ் 3-ம் பக்கம் கடைசி கலத்தில், 'தி. மு கழகத் தேர்தல் நிதி அளிக்க மருத்தவர் சங்க முயற்சி' என்ற தலைப்பில் வந்த செய்தியில், 'சங்கம்' என்றிருப்பதற்குப் பதிலாக, 'மருத்துவர்கள் சார்பில்' என்று திருத்திப் படித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆ - ர்)

சிதம்பரம் திருவள்ளுவர் படிப்பக முதலாண்டு விழா-பொங்கல் விழா

2—2—57 மாலை 5 மணிக்கு சிதம்பரம் தரவடித் தெருவில், தோழர் தில்லைவில்லாளன் தலைமையில் மேற்படி படிப்பகச் சார்பில் படிப்பக முதலாண்டு விழாவும் பொங்கல் விழாவும் கொண்டாடப்பெறும். தோழர்கள் க. அன்பழகன் பொன். சொக்கலிங்கம் ஆகியோர் பேசுவர். தோழியர் கஸ்தூரியின் இசை நிகழ்ச்சியும், நாடகங்களும் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.